RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 95 | ஏப்ரல்.12 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “என்டிஏ வந்தால் மீண்டும் தமிழகத்தை இருண்ட காலத்துக்குள் தள்ளிவிடுவர்” : முதல்வர் ஸ்டாலின்

புதுக்கோட்டை: ஏப்.12-

“என்டிஏ கூட்டணி தமிழ்நாட்டுக்குள் வந்துவிட்டது என்றால், தமிழ்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்குள் தள்ளிவிடுவார்கள். தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பாஜக.வின் வழக்கம். அதற்குத் துணை போவதுதான் அ.தி.மு.க.வின் பழக்கம்” என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம்: புதுக்கோட்டைக்கு என்று பெரிய வரலாறு இருக்கிறது. இங்கு இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். கீரனூர் முத்து மற்றும் விராலிமலை சண்முகம். 1965இல் தாய்த்தமிழைக் காப்பதற்காக தங்களின் உயிரையே தந்த இளைஞர்கள் அவர்கள். தமிழுக்கு மீண்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசால் ஆபத்து வந்திருக்கிறது. அந்த பா.ஜ.க.வையும் - அவர்களை தூக்கி சுமக்கும் அடிமை அ.தி.மு.க.வையும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்த உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன்.

இந்தத் தேர்தல் என்பது, எதற்கான தேர்தல்? இந்தத் தேர்தலில் வெல்லப்போவது யார், தமிழ்நாடா? டெல்லியா? தமிழ்நாட்டுக்கு எது தேவை? மக்களாட்சியா? சர்வாதிகாரமா? இதை நீங்கள், ஏப்ரல் 23 அன்றைக்கு ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் காட்ட வேண்டும்; நிரூபிக்க வேண்டும். கிரிக்கெட்டில் பல பிளேயர்ஸ், பல ரெக்கார்டுகளை வைத்திருப்பார்கள். ஆனால், சச்சின் டெண்டுல்கரைப் பார்த்தீர்கள் என்றால், அவரிடம் அனைத்து ரெக்கார்டுமே இருக்கும்! அரசியலில் அப்படிப்பட்ட முறியடிக்க முடியாத அனைத்து ரெக்கார்டும் தி.மு.க.தான் செய்திருக்கிறது என்பதை பெருமையோடு சொல்கிறேன். இனியும் தொடர்ந்து நாம்தான் ரெக்கார்டு பிரேக் செய்யவும் போகிறோம்.

நம்முடைய திட்டங்களைப் பார்த்துதான், இன்றைக்கு பல்வேறு மாநிலங்கள் காப்பி அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன், ஒன்றிய அரசே காப்பி அடித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்கான முன்னோடி திட்டங்களை செயல்படுத்துவதில், தி.மு.க.தான் ஒரிஜினல். ஆனால், இத்தனையும் செய்து கொண்டிருக்கும் இந்த ஸ்டாலின், கொரோனாவில் போயிருக்க வேண்டும் என்று பழனிசாமி வன்மத்துடன் பேசிக் கொண்டிருக்கிறார். இந்த ஸ்டாலின் இருந்து, என்னுடைய மக்களுக்கு இன்னும் ஏராளமான திட்டங்களை செய்யத்தான் போகிறேன்; அதையும் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்.

தமிழ்நாட்டை இன்றைக்கு இந்தியாவிலேயே டபுள் டிஜிட் வளர்ச்சி பெற்ற மாநிலமாக, நம்முடைய திராவிட மாடல் உயர்த்தியிருக்கிறது. இந்த அடித்தளத்தில் இருந்து, திராவிட மாடல் 2.0 ஆட்சியில் புதிய உயரங்களுக்கான பயணத்தை தொடங்கப் போகிறோம். அதற்கான திட்டமாகத்தான் ‘சூப்பர்ஸ்டார்’ வந்திருக்கிறார். “சூப்பர் ஸ்டாரு யாருனு கேட்டாஞ் சின்னக் குழந்தைகள்கூட சொல்லும்”. அதுதான் நம்முடைய தேர்தல் அறிக்கை. இந்த ஸ்டாலின் சொன்னால், சொன்னதை செய்வான். நான் கலைஞரின் மகன். சொன்னதை மறக்கவும் மாட்டேன்; மறுக்கவும் மாட்டேன். ஆனால், பா.ஜ.க.வின் கிளைக் கழகச் செயலாளராக இருக்கும் பழனிசாமி அவர்களால், இப்படி ஏதாவது சாதனைகளை சொல்லி, வாக்கு கேட்க முடியுமா?

எங்கேயாவது, அவர் சாதனைகளை சொல்லி, பார்த்திருக்கிறீர்களா? எங்கேயாவது, கொள்கைகளைப் பற்றி பேசி பார்த்திருக்கிறீர்களா? எங்கேயாவது, மாநில உரிமைகளுக்கு பழனிசாமி குரல் கொடுத்து பார்த்திருக்கிறீர்களா? நிச்சயம் பார்த்திருக்க மாட்டீர்கள். ஏன் என்றால், பாதம்தாங்கி பழனிசாமியிடம் கொள்கைகளும் இல்லை; சாதனைகளும் இல்லை. அதனால்தான், சாக்கடைக்கு



சமமான சொற்களையும், அவதூறுகளையும் பேசி, அவர் ஒரு தரமற்றவர் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

என்டிஏ எனும் பேரிடரை, தமிழ்நாட்டுக்குள் பின்வாசல் வழியாக கொண்டு வருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முதன்மை அடிமைதான், பழனிசாமி அவர் பழனிசாமி இல்லை. ஆமாம்சாமி அடிமைசாமி. அ.தி.மு.க. எந்தக் கூட்டணியில் அடிமை சாசனம் எழுதி கொடுத்து சேர்ந்திருக்கிறது. அன்னைத் தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்யும் என்டிஏ கூட்டணியில் சேர்ந்திருக்கிறது. அந்தக் கூட்டணி டெல்லியில் வைத்து முடிவு செய்யப்பட்ட கூட்டணி! அனைவருக்கும் தெரியும். ஊழல்வாதிகளும் தேர்ந்த துரோகிகளும், காவி கும்பலை தோளில் சுமந்து கொண்டு வருகிறார்கள்.

நேற்றுகூட, பா.ஜ.க.வில் இருக்கும் ஒன்றிய இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்? தமிழ்நாட்டில் என்டிஏ கூட்டணி ஆட்சியை அமைப்போம் என்று பேசியிருக்கிறார். அடிமைசாமியான பழனிசாமி இதற்கு ஏதாவது பதில் சொன்னாரா? என்ன சொல்வார்? ஒன்றும் சொல்லவில்லை.

தமிழ்நாட்டுக்கு வரும் பா.ஜ.க. அமைச்சர்கள் எல்லாம் என்னவெல்லாம் பேசிவிட்டு போகிறார்கள் என்று பத்திரிகைகளில், டி.வி.யில், செய்திகளில் வருகிறது. அனைத்தையும் பார்க்கிறீர்கள். அமைச்சராக இருக்கக்கூடிய பியுஷ் கோயல் - அமைச்சராக இருக்கக்கூடிய தர்மேந்திர பிரதான் என்று இங்கு வருபவர்கள் எல்லாம், இந்தித் திணிப்புக்கு ஆதரவாக மும்மொழிக் கொள்கையை செயல்படுத்துவோம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதை எதிர்த்து அடிமைசாமி ஏதாவது குரல் கொடுத்திருக்கிறாரா?

ஒன்றிய கல்வி அமைச்சராக இருக்கும் தர்மேந்திர பிரதானின் வேலை என்ன? கல்வியை வளர்ப்பதில்லை; கல்வியை காவிமயமாக்கினார்! இந்தியைத் திணிக்க மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவாக பேசிவிட்டு செல்கிறார். இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று நம்முடைய குழந்தைகளின் படிப்புக்கு கொடுக்க வேண்டிய, இரண்டாயிரம் கோடி ரூபாய் கல்வி நிதியை கொடுக்காமல் தடுப்பது! இதெல்லாம்தான், அவரது வேலை.

மும்மொழித் திட்டத்தை செயல்படுத்துங்கள், இரண்டாயிரம் கோடியை தருகிறோம் என்று அமைச்சர் பிரதான் சொன்னார். இரண்டாயிரம் கோடி இல்லை; பத்தாயிரம் கோடியே கொடுத்தாலும், இந்தியைத் திணிக்க அனுமதிக்க மாட்டேன். எங்கள் குழந்தைகளின் படிப்புச் செலவையும், ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும் நானே கொடுத்துக் கொள்கிறேன் என்று உறுதியாக சொன்னவன் தான், இங்கே உங்கள் முன்னால் நிற்கின்ற ஸ்டாலின். இதுவே அடிமைசாமியாக இருந்தால், எதிர்த்து குரல் கொடுத்திருப்பாரா? இதெல்லாம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நீண்ட கால செயல்திட்டங்களின் ஒரு பகுதி.

எதற்காக இதையெல்லாம் செய்கிறார்கள் என்றால், நம்முடைய குழந்தைகள் கல்வி நிலையங்களைவிட்டு வெளியேற வேண்டும்; அறிவியல்பூர்வமாக சிந்திப்பதை நிறுத்த வேண்டும்; வாட்ஸ்அப் வதந்திகளையும், பிற்போக்குத் தனங்களையும் நம்ப வேண்டும்; அப்போதுதான் அந்தக் காலம் போன்றே நாம் முன்னேறாமல் முடங்கிக் கிடப்போம்; ஒரு சிலர் மட்டும் வாய்ப்புகளை தட்டிப் பறித்து, முன்னேறுவார்கள். இதுதான், அவர்களின் திட்டம்; அவர்களின் எண்ணம். இதற்கான செயல்திட்டங்களுக்கு எல்லாம் ஆமாம்சாமி போடும் முரட்டு அடிமையாக வாய்த்திருப்பவர்தான், இந்த அடிமைசாமி! அடுத்தடுத்த துரோகங்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் பெயர்தான், என்டிஏ கூட்டணி.

பழனிசாமிக்கு உண்மையிலேயே தமிழ்நாட்டு மேல் அக்கறை இருந்தால், தர்மேந்திர பிரதான் தொடங்கி, அமித் ஷா மோடி வரைக்கும் மேடையில் உட்கார வைத்து, “இது தமிழ்நாடு! இங்கு அண்ணா வகுத்துக் கொடுத்த இருமொழிக் கொள்கை மட்டும்தான் இருக்கும்” என்று ஆணித்தரமாக பேச முடியுமா அவரால்? ஒரு அடிமையால் ஓனரை எதிர்த்து பேச முடியாது. பிரதமர் மோடியை பார்த்து, “தமிழ்நாட்டுக்கு வரும்போதெல்லாம் ‘வணக்கம்’, ‘நன்றி’ என்று மட்டும் சொல்லி, தமிழில் பேச முடியவில்லை என்று வருத்தப்படுவதாக” சொல்கிறீர்களே, பிறகு ஏன், தமிழைவிட சமஸ்கிருதத்திற்கு 17 மடங்கு அதிகமாக நிதி வழங்குகிறீர்கள் என்று கேள்வி கேட்பாரா, இந்த அடிமை பழனிசாமி?.

அமித்ஷா அவர்களைப் பார்த்து, “சமஸ்கிருதம்தான், அனைத்துக்கும் மூலமொழி” என்று நீங்கள் சொல்வது தவறு என்று பழனிசாமியால் வாதிட முடியுமா? அதற்கான முதுகெலும்பு பழனிசாமிக்கு இருக்கிறதா? அவரை சும்மா ஒன்றும் ஆமாம்சாமி, அடிமைசாமி என்று சொல்லவில்லை. எதற்கெல்லாம் ஆமாம்சாமி போடுகிறார்?. குடியுரிமைத் திருத்தச் சட்டம்! அவர் நினைத்திருந்தால் அவர்கள் எம்.பி.க்கள் ஆதரிக்காமல், அதை தடுத்திருக்க முடியும். ஆனால், ஆமாம்சாமி போட்டு இசுலாமியர்களுக்கு துரோகம் செய்தார். அதேபோன்று, வக்பு திருத்தச் சட்டத்தையும் ஆதரித்து, சிறுபான்மையினருக்கு துரோகம் செய்தார் அடிமைசாமி. அடுத்து, கிறிஸ்தவர்களுக்கு எதிராக தி.சி.ஸி.கி. சட்டம் கொண்டுவரப் போகிறார்கள். கூட்டணியில் இருக்கும் பழனிசாமி, தேர்தலுக்காகவாவது அதை எதிர்த்து பேசியிருக்கிறாரா?.

அடுத்து, நீட் தேர்வை பற்றி பேசுகிறார். நீட் தீர்மானத்தை ஒன்றிய அரசுதான் நிறுத்தி வைத்திருக்கிறது என்று அனைவரும் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், அதை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியதையே கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகாலமாக மறைத்து வைத்தவர்தான் பழனிசாமி. அந்த மாதிரி துரோகம் எல்லாம் யாரும் பண்ணவில்லை. உடனே, நாங்கள் என்ன பண்ணோம் என்று கேட்பார்ஞ் நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறேன். நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என்பது எங்களின் நிலைப்பாடு. ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்திருந்தால், நீட் தேர்வு தமிழ்நாட்டில் இருந்திருக்காது. அதற்கான உறுதியை பிரதமர் வேட்பாளராக இருந்த ராகுல் காந்தியே பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்.

ஆனால், கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் ஆட்சி அமைத்திருக்கும் பிரதமர் மோடியை பார்த்து, “தமிழ்நாட்டுக்கு நீட் விலக்கு தாருங்கள்” என்று அடிமைசாமியால் கேட்க முடியுமா?. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற சட்டப்பூர்வமாக நாங்கள் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். கொள்கையை விற்று பிழைக்கும் அடிமைசாமி கூட்டத்துக்கு சுயமரியாதை உணர்வும் இருக்காது; மாநில உரிமைகளும் புரியாது.

இப்போதுகூட, நாடு முழுவதும் மக்கள், “மோடி ஜி, Where is L.P.G.” என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஹோட்டல்களை இழுத்து மூடிவிட்டார்கள். பல ஹோட்டல்களில் மெனுவை குறைத்துவிட்டார்கள். பல ஹோட்டல்களில் விலையை ஏற்றிவிட்டார்கள். இதனால், உணவுக்காக ஹோட்டல்களை நம்பியிருப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் முழுவீச்சில் சரிசெய்ய முயற்சிக்காமல், சிலிண்டர் விலையை 200 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். அதுவும் சரியாக வழங்கப்படுவதில்லை. இதையெல்லாம் எதிர்த்து பழனிசாமி குரல் கொடுத்திருக்கிறாரா? அதனால்தான், அவரை அடிமைசாமி என்று சொல்கிறோம். துரோகத்தில் டாக்டரேட் வாங்கும் அளவுக்கு அனைவருக்கும் இவ்வளவு துரோகம் செய்துவிட்டு, வாய் கூசாமல் பொய்யாய் பேசிக் கொண்டிருக்கிறீர்களே பழனிசாமி.

தமிழ்நாட்டு மக்கள் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பா.ஜ.க.வின் வழக்கம்! அதற்குத் துணை போவதுதான் அ.தி.மு.க.வின் பழக்கம்! இவர்களின் அத்தனை துரோகங்களையும் கடந்துதான், நாம் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நன்றாக புரிந்துக் கொள்ளுங்கள். டபுள் எஞ்சின், டப்பா எஞ்சின் என்று சொல்லிக் கொண்டு வரும் என்டிஏ கூட்டணி தமிழ்நாட்டுக்குள் வந்துவிட்டது என்றால், தமிழ்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்குள் தள்ளிவிடுவார்கள்’ எனத் தெரிவித்துள்ளார்.

## “முதல்வரின் திறன் பற்றி ஆ.ராசா பேச்சு எங்கள் பிரச்சாரத்துக்கு கூடுதல் பலம்” அண்ணாமலை கருத்து

நீலகிரி, ஏப்.12-

நீலகிரி மாவட்டம் ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி பாஜக வேட்பாளர் மு.போஜராஜனை ஆதரித்து பிரச்சாரம் செய்ய அண்ணாமலை நேற்று காலை கோவையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி வந்தார். தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தில் அவர் வந்து இறங்கியதும், அங்கு தயாராக நின்ற தேர்தல் பறக்கும் படையினர், ஹெலிகாப்டரை சோதனையிட்டனர்.

பின்னர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் கடந்த முறை சில ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்தோம். அதன் பிறகு ஐந்து ஆண்டு காலம் மிக கடுமையாக உழைத்திருக்கிறோம். அதிமுக தலைவர்கள், தொண்டர்கள் எல்லாம் முழு ஒத்துழைப்பை நல்கி, இந்த முறை நிச்சயமாக ஊட்டியில் போஜராஜனுக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கும் என்று முழுமையாக நம்புகிறோம். காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு முறை இங்கு மக்கள் வாய்ப்பு கொடுத்தனர். ஆனால், எந்தவிதமான அடிப்படை வசதியும் செய்யவில்லை.

புதுச்சேரியில் 91 சதவீதம் வாக்குப் பதிவாகி யுள்ளது. அசாமிலும் மிக அதிகமான வாக்குப்பதிவு. காரணம் எஸ்ஐஆர் மூலமாக போலி வாக்குகள் நீக்கப்பட்டிருப்பது இயற்கையாகவே வாக்கு சதவீதத்தை அதிகப்படுத்தியிருக்கிறது.

மே 4ம் தேதிக்கு பிறகு பழனிசாமி முதலமைச்சராக பொறுப்பேற்கும்போது தமிழகம் முழுவதும் ஒரு எழுச்சியான சூழல் உருவாகும். தமிழக வெற்றிக் கழகம் மற்றும் சீமான் களத்தில் இருந்தாலும், தேர்தல் என்று வந்துவிட்டால் அது இருமுனைப் போட்டியாகத்தான் இருக்கும். ஒன்று ஆளும் திமுக, மற்றொன்று அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி.

முதல்வர் ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி கருத்தை தவறான ஒரு சூழலில் பேசுகிறார். கனிமொழி எங்களை யாராவது எதிர்த்துப் பேசினால் ‘மலர் வளையம்’ வைப்போம் என்று கூறுகிறார். இது மிரட்டல் இல்லையா? மேலும், நட்சத்திரப் பேச்சாளராக இருக்கும் ஆ.ராசா இதுவரை திமுகவின் ஒரு கூட்டத்தில் கூட பங்கேற்கவில்லை. ஒரு ஆடியோவில் அவர் முதல்வரின் திறன் பற்றியும், 2ஜி வழக்கு பற்றியும் ஆ.ராசா பேசியுள்ளது தமிழக மக்கள் அனைவருக்கும் தெரியும். இது எங்களுடைய பிரச்சாரத்துக்கு இன்னும் கூடுதல் பலம் சேர்த்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## “இலவசங்களை அறிவிக்கும் கட்சிகள் அதற்கான நிதி குறித்து விளக்க வேண்டும்” வெங்கய்ய நாயுடு

சென்னை, ஏப்.12-

இலவசங்களை அறிவிப்பவர்கள் அதற்கான நிதி குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள வெங்கய்ய நாயுடு, மக்களும் இது குறித்து கேள்வி எழுப்ப வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற குடியரசு முன்னாள் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், “ஒரு மனிதனுக்கு மீனை கொடுப்பதைவிட மீன் பிடிக்க கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற ஒரு பழமொழி உண்டு. தொடர்ந்து இலவசங்களை கொடுத்துக்கொண்டே இருந்தால் மக்கள் மேலும் பலவற்றை எதிர்பார்க்கத் தொடங்குவார்கள். இதைத்தான் நான் நிகழ்ச்சியில் பேசும்போதும் தெரிவித்தேன். நான் எந்த ஒரு மாநிலத்தையும் குறிப்பிடவில்லை. இது நாடு



முழுவதுமே நடக்கிறது.

இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு அரசும் மக்களின் கல்வி மற்றும் சுகாதாரத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அரசால் வழங்க முடியும் என்றால் இலவசங்களைக் கொடுக்கலாம். அதே நேரத்தில், இலவசங்கள் குறித்த வாக்குறுதிகளை அளிப்பது அது எந்த கட்சியாக இருந்தாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், எந்த அரசாங்கமாக இருந்தாலும் அவர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்த திட்டத்துடன் வாக்குறுதிகளை அளிக்க வேண்டும். நிதிநிலை அறிக்கை இல்லாமல், மாநிலத்தின் நிதி நிலைமை குறித்த புரிதல் இல்லாமல் இன்னும் இன்னும் இலவசங்கள் அறிவிக்கப்படுமானால் மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அதனிடம் கேள்வி கேட்க வேண்டும்.

இலவசங்கள் அறிவிக்கிறீர்களே, அதற்கான நிதிக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? எவ்வாறு பட்ஜெட்டை திட்டமிடப் போகிறீர்கள்? எவ்வாறு நிதி திரட்டப் போகிறீர்கள்? என்ற கேள்விகளை மக்கள் கேட்க வேண்டும். இந்த விஷயத்தை நான் மிகவும் வலியுறுத்த விரும்புகிறேன்” என தெரிவித்தார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக சிறப்பு நாடாளுமன்ற அமர்வு கூட இருப்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த வெங்கையா நாயுடு, “பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நீட்டிக்கப் பட்டிருப்பதை நான் உறுதியாக வரவேற்கிறேன். ஏனெனில் இது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த ஒரு திட்டம். மக்கள் தொகையில் பெண்கள் 50 சதவீதத்தை வகிக்கின்றனர். அவர்கள் சமூகத்தின் ஒருங்கிணைந்த அங்கமாகத் திகழ்வதோடு, நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டியவர்கள் என்பதால், அவர்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதில் எவ்விதச் சிக்கலும் இருக்கக்கூடாது.

இது ஒன்றும் புதிய சிந்தனை அல்ல; இது குறித்து முன்னரே விவாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிறைவேற்றப்படும் உள்ளது. எனவே, தற்போது இம்சோதா முழுமையாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய, அவையின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது” என தெரிவித்தார்.

## கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும்

# இந்தியாவில் கிறிஸ்தவ மதத்தின் வரலாறு




இந்தியாவுக்கு கிறிஸ்தவம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது என்பதுதான் உண்மை அதாவது இயேசுவின் 12 சீடர்களுள் ஒருவரான புனித தோமையர் கி.பி. 52ல் இந்தியா வந்து, கேரள மற்றும் தமிழகப் பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினார். இறுதியாக இவர் சென்னையில் தோமையார் மலை என அழைக்கப்படும் பரங்கிமலையில் இயேசு கிறிஸ்துவுக்காக உயிர்த்தியாகம் செய்தார். ஆகவே இந்தியாவில் கிறிஸ்தவர்கள் சுமார் 2000 ஆண்டுகளாக கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றி வருகின்றார்கள். ஆகவே கிறிஸ்தவம் உலகம் முழுவதும் பரவிய அதே காலகட்டத்திலையே இந்தியா வந்தது என்பதும் வரலாறு.

இதனை சற்று விரிவாக பார்த்தோமானால் கிறிஸ்தவ சமயத்தின் தோற்றுவிப்பாளர் இயேசு கிறிஸ்து பாலஸ்தீனத்தில் உள்ள பெத்லகேம் நகரத்தில் கி.மு 25.12.0001 ஆம் ஆண்டு புனித யோசேப்பு மற்றும் அன்னை மரியா ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இயேசு என்பதின் பெயர் விடுதலையாக்குபவர் என்று பொருள். இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறந்து நசரேத்தில் வளர்ந்து தனக்காக 12 திருத்தூதர்களை தேர்வுசெய்து சுமார் 200 கி.மி மட்டும் பயணம் செய்து கிபி 33ம் ஆண்டில் உலக பாவங்களுக்காக சிலுவையில் மரணம் அடைந்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பது வரலாறு.

அவ்வாரு இயேசு கிறிஸ்து தேர்ந்தெடுத்த 12 திருத்தூதர்களில் ஒருவர் மிகவும் முக்கியமானவர் புனித தோமையார் கி.பி. 52ல் இந்தியா வந்து, கேரள மற்றும் தமிழகப் பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியவர். இறுதியாக இவர் சென்னை பரங்கிமலையில் (தோமையார் மலை) உயிர்த்தியாகம் செய்தார். அவ்வாறு பார்க்கும் போது இன்றைய இந்திய கிறிஸ்தவர்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேல் இந்திய மண்ணில் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இயேசு கிறிஸ்துவை பற்றி குறிப்பிடும்போது சொல்வார்கள் இவர் 200 கிலோ மீட்டருக்கு மேல் பயணம் செய்யாதவர். தன்னைப் பற்றி எந்த நூலையும் எழுதாதவர் மற்றும் தான் பிறந்த 33 ஆண்டுகளிலேயே இறந்தவர் அப்படி இருக்க இவர் உலக வரலாற்றையே கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) மற்றும் கிறிஸ்துவுக்கு பின் (கி.பி) என பிரித்து மேற்படி இன்று வரை உலகின் அதிக அளவில் பின்பற்றப்படும் சமயமாக கிறிஸ்துவ சமயம் இருந்து வருகிறது. சுருக்கமாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் இறப்பும் உயிர்ப்பும் மனித குலத்திற்கு வைரம்பாய்ந்த மரம் போல் பல நன்மைகளை காலம் கடந்தும் இன்றுவரை நின்று செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

நாம் இன்று இயேசு கிறிஸ்து பற்றி அறிந்து கொள்வது முக்கியமாக Bible (பைபிள்) மூலமாகத்தான். Bible (பைபிள்) என்பது கிறிஸ்தவர்களின் புனித நூல். இது சுமார் 1,500 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் பல்வேறு எழுத்தாளர்களால் எபிரெயு (Hebrew), அராமைக் (Aramaic) மற்றும் கிரேக்க (Greek) மொழிகளில் எழுதப்பட்டது. இந்த நூல் படைப்பின் தொடக்கம் முதல் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய போதனைகள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் திருச்சபையின் ஆரம்பம் வரை யிலான நிகழ்வுகளை விவரிக்கிறது. விவிலியம் என்பது ஒரே ஒரு நூல் அல்ல அது பல நூல்களின் தொகுப்பாகும். இதில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன. அவற்றில் 39 புத்தகங்கள் பழைய ஏற்பாட்டையும், 27 புத்தகங்கள் புதிய ஏற்பாட்டையும் சேர்ந்தவை. மொத்தமாக, பைபிளில் 31,102 வசனங்கள் இடம்பெற்றுள்ளன. பழைய ஏற்பாடு பெரும்பாலும் கி.மு. 1200 முதல் கி.மு. 450 வரையிலான காலகட்டத்தில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு கி.பி. 1ஆம் மற்றும் 2ஆம் நூற்றாண்டுகளில் 40க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களால் எழுதப்பட்டது.

கிறிஸ்தவர்களின் புனித நூலாகக் கருதப்படும் பைபிளின் அர்த்தத்தைச் சிறிது ஆராய்ந்தால், விவிலியம் (Bible) என்ற சொல்லின் மூலச்சொல் கிரேக்க மொழியில் உள்ள பிப்லியன் (Biblion) என்பதாகும். 6ஆம் மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் (Medieval period) காலகட்டத்தில் ஆங்கிலத்தில் பைபிள் (Bible) என்ற ஒருமைச் சொல்லாக நிலைபெற்றது. இதன் மற்றொரு பொருள் The Book (a collection of sacred writings) என்பதாகும். இன்றளவும் உலகில் The Book என்றால் அது பைபிள் (Bible) என பொருள்படும் என்பது சிறப்பானது.

மேலும் பிப்ளோசு (Biblos) என்பது இன்றைய இலெபனான் நாட்டிலுள்ள ஒரு துறைமுகப்பட்டினம். புத்தகம் எழுதப் பயன்படும் பப்பைரசு (Papyrus) என்னும் ஒரு வகை நாணல் புல் அங்கு விற்கப்பட்டது. பின்னீடு பப்பைரசு (Papyrus) என்ற கிரேக்க இலத்தீன் சொல்லிலிருந்து paper என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும் என்ற தலைப்பை ஆராய்வதற்கு முன், கிறிஸ்தவமும் உலக சட்டங்களும் என்ற தலைப்பைப் பற்றி சில அம்சங்களை முதலில் பார்க்கலாம். உலகத்தில் உருவான சட்டங்களின் நெறிமுறைகள் மற்றும் நீதிக் கோட்பாடுகளில் பைபிளின் (Bible) தாக்கம் காணப்படுவது உண்மையாகும். உதாரணமாக, பத்து கட்டளைகளில் காணப்படும் கொலை செய்யக்கூடாது, திருடக்கூடாது போன்ற நெறிமுறைகள் பின்னர் பல நாடுகளின் குற்றச்சட்டங்களில் (Criminal Law) ஒத்த கருத்துகளாக இடம் பெற்றுள்ளன. அதேபோல், நீதிமன்றங்களில் சாட்சி அளிக்கும் போது உண்மையைப் பேச வேண்டும் என்ற சத்தியப்பிரமாணம் (Oath) நடைமுறையும் கிறிஸ்தவ மரபின் தாக்கத்தால் வலுவடைந்தது. மேலும், ஒரே கணவர்/மனைவி என்ற திருமணக் கருத்தும் (Marriage Laws), கருணை, நீதி, சமத்துவம் (Principles of Law Compassion, Justice, Equality) போன்ற மதிப்புகளும் பல சட்டக் கோட்பாடுகளில் பிரதிபலித்துள்ளன.

1773 முதல் 1947 வரையிலான காலகட்டத்தில் பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் இயற்றிய சட்டங்களை பற்றியும் பார்ப்போம். கிறிஸ்தவ பெரும்பான்மை கொண்ட ஆங்கிலேயர்களும் மற்றும் மற்ற ஐரோப்பிய பேரரசுகளும் 15ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி சுமார் கி.பி.1500-1950 வரை, உலகின் 100க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களை தங்களது காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டு வந்திருந்தனர் என்பது வரலாறு. குறிப்பாக, பிரிட்டிஷ் பேரரசு 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் உலக நிலப்பரப்பின் சுமார் 25% பகுதியை ஆட்சி செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும் என்ற தலைப்பின் கீழ் ஆராய்ந்தால், இந்தியா சுதந்திரம் பெறும் முன், குறிப்பாக 1773 முதல் 1947 வரை உள்ள காலகட்டத்தில், பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய ஆட்சியாளர்கள் இந்திய சட்ட துறைக்கு 500க்கும் மேற்பட்ட சட்டங்களை இயற்றி முக்கிய பங்களிப்பு செய்துள்ளனர் என்றால் அது உண்மை. அந்த 500க்கும் மேற்பட்ட சட்டங்கள் இன்றளவும் இந்திய சட்ட அமைப்பின் மூலக் களமாகப் பயன்பட்டு, சுதந்திர இந்தியாவில் புதிய சட்டங்களை உருவாக்க வழிகாட்டுகின்றன. ஆகவே, இந்திய சட்ட வரலாற்றில் பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது என்றால் அது மிகையாகாது.

அதோடு மட்டும் அல்லாது நாம் முக்கியமாக பார்க்க வேண்டியது 1773 முதல் 1947 காலகட்டத்தில் இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷ் மற்றும் மற்ற ஐரோப்பிய ஆட்சியாளர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், அவர்கள் இயற்றிய சட்டங்கள் கிறிஸ்தவ சட்டங்கள் அல்ல. அவை அதிகாரப்பூர்வ காலனித்துவ சட்டங்களாகும். இச்சட்டங்கள் பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகம், ஆட்சி மற்றும் கட்டுப்பாட்டிற்காக உருவாக்கப்பட்டவை.

உதாரணமாக இந்திய தண்டனை சட்டம் (Indian Penal Code மிறிசி) 1860ல், தாமஸ் பேபிங்டன் மெக்காலி (Thomas Babington Macaulay) அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டது. இந்திய சாட்சியச் சட்டம் (Indian Evidence Act) 1872ல் சர் ஜேம்ஸ் ஃபிட்ஸ்ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Fitzjames Stephen) அவர்களால் வடிவமைக்கப்பட்டது. சொத்து மாற்றச் சட்டம் (Transfer of Property Act) 1882ல் சர் ஹென்றி மெய்ன் (Sir Henry Maine) உள்ளிட்ட சட்ட நிபுணர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டது. இந்திய ஒப்பந்தச் சட்டம் (Indian Contract Act) 1872 மற்றும் பல சட்டங்கள்.

இச்சட்டங்கள் அனைத்தும் தர்க்கம் (logic), சட்டக் கோட்பாடுகள் (legal principles) மற்றும் ஒப்பீட்டு சட்ட ஆய்வு (comparative law) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது. மேலும் இதனைப் பற்றி அடுத்த கட்டுரையில் அறிந்துகொள்வோம்.

**திரு. அருள் ஜெயராஜ்**
S MSW., LL.B
வழக்கறிஞர்
PRO சிவகங்கை
RC மறைமாவட்டம்
கைப்பேசி : 8489 007 001
மின்னஞ்சல்:
arulattorney@gmail.com

## மானாமதுரை சட்டமன்றத் தொகுதி: வேட்பாளர் பட்டியல் வெளியீடு தேர்தல் பார்வையாளர்கள் நியமனம்

மானாமதுரை ஏப்.12-

சிவகங்கை மாவட்டம் (187)மானாமதுரை (தனி) சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் பணிகள் விறுவிறுப்படைந்துள்ளன. இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தேர்தலைக் கண்காணிக்க இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்புப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பார்வையாளர்கள் நியமனம்தேர்தல் நியாயமாகவும், விதிமுறைகளுக்கு உட்பட்டும் நடப்பதை உறுதி செய்ய பின்வரும் உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்: பொதுப் பார்வையாளர்:

காஞ்சன் வர்மா, IAS (Kanchan Verma). தேர்தல் செலவினப் பார்வையாளர்: கிருஷ்ணகுமார் பிரசாத், IRS (Krishnakumar prasad).இவர்கள் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்கள் மற்றும் நடத்தை விதிமீறல்களைத் தீவிரமாகக் கண்காணிப்பார்கள்.

வேட்பாளர் பட்டியல் விவரம்தேர்தல் நடத்தும் அதிகாரியால் வெளியிடப்பட்ட இறுதிப் பட்டியலில் (படிவம் 4), மொத்தம் 16 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்:

1. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்: சண்முகப்பிரியா.ம (நாம் தமிழர் கட்சி). தமிழரசி.ஆ (திராவிட முன்னேற்றக் கழகம்). பாலகணபதி.வே(பாரதிய ஜனதா கட்சி).2. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள்: அருண்பாண்டியன்.அ (தமிழக வாழ்வுரிமை கட்சி). ஆறுமுகம். வெ(இந்திய குடியரசு கட்சி அத்வாலே). இளங்கோவன்.து (தமிழக வெற்றிக் கழகம்). திலகராஜ் .க (அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்).

ராஜமாணிக்கம்.அ (புதிய தமிழகம்).3. சுயேட்சை வேட்பாளர்கள்:

தொகுதியில் கருப்புசாமி.வீ, சங்கர்கணேசன்.ச, சதிஸ்.தி, துரைப்பாண்டி.சே, பாரதிதாசன்.ச, பூமணத்தமிழன். ரா, ராஜு.ஜே.எம் மற்றும் வீரபாண்டி.வீ ஆகிய 8 சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.தேர்தல் விதிமுறைகளின்படி, அனைத்து வகை வேட்பாளர்களுக்கும் தொடர்ச்சியாக 1 முதல் 16 வரை எண்கள் வழங்கப்பட்டுள்ளன.



■ கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கெலமங்கலம் கிழக்கு ஒன்றியம்நாகமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட நிலகிரியில்வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் கே.பி.முனுசாமி கடும் வெயிலிலும் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



## பல்லாவரத்தில் அதிமுக கூட்டணியில் போட்டியிடும் ஐஜேகே வேட்பாளர் வெங்கடேசன் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

பல்லாவரம் ஏப்.12-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஐ.ஜே.கே. வேட்பாளர் வழக்கறிஞர் வி.வெங்கடேசன் பல்லாவரம் பகுதி 17வது மேற்கு வட்டக் கழக செயலாளர் க.சிவமூர்த்தி ஏகேஎஸ், 17வது கிழக்கு வட்டச் செயலாளர் ராமநாதன் ஆகியோர் தலைமையில் பழைய பல்லாவரம் மலைகாநந்தபுரம் கச்சேரி மலை பாரதி நகர் மெயின் ரோடு உட்பட்ட பகுதியில் வீதி விதியாக வாகனத்தில் சென்று இரட்டை இலை சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார் அப்போது அதிமுக ஆட்சியில் பொதுமக்களுக்கு செய்துதரப்பட்ட நல்லதிட்டங்களைபொதுமக்களிடம் எடுத்துக் கூறியும் அதிமுக ஆட்சிக்காலத்திலேயே மகளிர்காக அதிக திட்டங்களை திமுக முடுக்கி உள்ளனர்.

அதிமுக ஆட்சி மலர்ந்த தும் அந்த திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும் பெண்களுக்கு பாதுகாப்பு போதை இல்லா தமிழகம் மலர இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என கேட்டுக்கொண்டார் அவர் வாக்குசேகரிக்க சென்றபோது உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் வெங்கடேசன், பல்லாவரம் பகுதி அதிமுக செயலாளர் ஜெயபிரகாஷ். கீழ்கட்டளை பகுதி செயலாளர் சந்திரசேகர் ராஜா, மற்றும் கீழ்கட்டளை பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தனர்.



■ திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி 15வது வார்டு கீழ் சிட்டரபாக்கத்திற்கு வாக்குசேகரிக்க வருகை தந்த தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் கும்முடிப்பூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் கூஷி.சுதாகர் மற்றும் எல்லாபுரம் ஒன்றியகுழு முன்னால் சேர்மன் ரமேஷ், பி.ஜே.பி மாவட்ட தலைவர் ஷி.சுந்தரம் அவர்களுக்கது ஊத்துக்கோட்டை பேரூர் அதிமுக துணைச்செயலாளர் கூஷி.ஷி.சுகுமார் தலைமையில் மற்றும் சி.பரமசிவம், ஜமால், நவீன் முன்னிலையில் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி சிறப்பான வரவேற்பாளித்து வாக்கு சேகரித்து ஆதரவு திரட்டினார்கள்



## புள்ளிலையன் ஊராட்சியில் புழல் ஒன்றிய திமுக நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.12-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனத்திற்கு புழல் ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ் வழிகாட்டுதலின்படி புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சியில் புழல் ஒன்றிய துணை செயலாளர் ரராஜேஷ்வரிஎத்திராஜ் தலைமையில் புழல் ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் எ.பிரேமலதா, புழல் ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் எஸ்.ஜி.சாக்ரடீஸ்,புதுநகர் கிளை கழக செயலாளர் சி.மனோகரன், புழல் ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் டி.அருணகிரி,முன்னாள் புள்ளிலையன் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் மாதவரம், புழல் ஒன்றிய தொழிலாளர் அணி அமைப்பாளர் சவன்இ. பாஸ்கர், முன்னாள் புள்ளிலையன் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் வழக்கறிஞர் ராஜா, புழல் ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் இ.பி.பத்மநாபன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இணைந்து வீடு வீடாக சென்று திமுக செய்துள்ள சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வாக்காளர்கள் இடம் வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.



■ திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி 15 வார்டுகளுக்கு வாக்குசேகரிக்க வந்த கும்முடிப்பூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் கூஷி.சுதாகர் மற்றும் பி.ஜே.பி மாவட்ட தலைவர் ஷி.சுந்தரம் அவர்களுக்ககு மாவட்டத்துணை தலைவர் வி.ரி.சீனிவாசன் கிழக்கு ஒன்றிய தலைவர் குருதேவ்உதாயா தலைமையில் ஒன்றிய பொதுச் செயலாளர்கள் ரி.கேசவன், ராணி, ஒன்றிய பொருலாளர் சி.பரமசிவம், ஒன்றிய துணைதலைவர் வழக்கறிஞர் கோகுல், முன்னிலையில் மாலை மற்றும் சால்வை அணிவித்து சிறப்பான வரவேற்பாளித்து ஆதரவு திரட்டினார்கள்



■ வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி சூளகிரி தெற்கு ஒன்றியம்பங்கினப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட போகிபுரம் உள்ளிட்ட கிராமங்களில் வேப்பனப்பள்ளி தொகுதி அதிமுக வேட்பாளர் கே பி முனுசாமி எம்எல்ஏ இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



## புழல் ஒன்றியம்புள்ளிலையன், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.12-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி அதிமுக வேட்பாளரும் முன்னாள் பால்வளத்துறை அமைச்சரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளருமான வி.மூர்த்தி புழல் ஒன்றிய செயலாளர் ஆர்.சுப்பிரமணி தலைமையில் புழல் ஒன்றியம் புள்ளிலைன் ஊராட்சிக்குஉட்பட்ட ஜவஹர்லால் நகர், செல்வவிநாயகர் கோயில் புதுநகர், சாந்தி காலனி, பாலாஜி கார்டன், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சிக்கு உட்பட்ட ,பாலவாயல், அக்பர் நகர்,கோட்டூர், கோமதியம்மன் நகர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். அப்போது முன்னாள் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் கவிதாடேவிட்சன், முன்னாள் புழல் துணை பெருந்தலைவர் சரளாசுகுமார், முன்னாள் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி மன்ற துணைத்தலைவர் செல்வராஜ், புள்ளிலையன் கிளை செயலாளர் செல்வராஜ், புள்ளிலையன் முன்னாள் துணைத்தலைவர் கோவிந்தன், அம்மாபேரவை அவைத்தலைவர் ராஜ் குமார் மற்றும் கண்ணதாசன், விஜயகுமார், மோகன், பச்சை, வளர்மதி ஈஸ்வரன், பெருமாள் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் வேட்பாளருக்கு உற்சாகமாக வரவேற்ப்பு அளித்தனர்.





## மாதவரம் தெற்கு பகுதி 33வது வார்டில் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.12-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மாதவரம் தெற்கு பகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனம் 33 வது வார்டு அனைத்து பகுதிகளில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் துக்காராம் மற்றும் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அதேபோல் 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் குணசுந்தரிகுட்டிமோகன் மற்றும் 33வது வட்ட துணை செயலாளர் தசரதன்மாலதி ஆகியோர் ஏற்பாட்டில் பாட்டாசு வெடித்து வேட்பாளருக்கு அம்மன் கோயில் மற்றும் பெருமாள் கோயிலில் சிறப்பு பூஜைகள் செய்து பின்னர் மலர்மாலை அணிவித்து,பொன்னாடை போர்த்தி பெண்கள் ஆரத்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்றனர். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் எம்ஜிஆர் மன்ற ஒன்றிய துணை செயலாளர் சேகர் உடல் நலம் சரியில்லாமல் இருந்தார்.தகவல் அறிந்த கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக வேட்பாளர் அசோக்குமார் எம் எல் ஏ நேரில் சென்று நலம் விசாரித்தார். ஒன்றிய செயலாளர் பையூர் ரவி, நகர செயலாளர் விமல்,வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் ஜெயக்குமார்விவசாய அணி மாவட்ட செயலாளர் மோகன், எம்ஜிஆர் மன்ற மாவட்ட துணை தலைவர் ஆறுமுகம் உள்ளிட்டோர் நேரில் சென்று நலம் விசாரித்தார்கள்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் வடக்கு ஒன்றியம் மிட்டப்பள்ளி கிராமம் பேருந்து நிறுத்தத்தில்,பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ.,பேருந்தில் பயணிகளிடம், தமிழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரத்தை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



## ஜனநாயகன் திரைப்படம் எங்கள் தரப்பில் இருந்து கசியவில்லை: தணிக்கை வாரியம் விளக்கம்

சென்னை, ஏப்.12-

ஜனநாயகன் திரைப்படம் எங்கள் தரப்பில் இருந்து கசியவில்லை என தணிக்கை வாரியம் விளக்கமளித்துள்ளது. தணிக்கை வாரியத்தில் இருந்து ஜனநாயகன் படம் கசியவிடப்பட்டதாக வெளியான தகவல் அடிப்படை ஆதாரமற்றது. சான்றிதழுக்காக சமர்பிக்கப்படும் அனைத்து படங்களுக்கும் பாஸ்வேர்டு பாதுகாப்பு உள்ளது. திரைப்படங்களுக்கான பாஸ்வேட்டு தயாரிப்பாளரிடம் மட்டுமே இருக்கும் என்று தணிக்கை வாரியம் தெரிவித்துள்ளது



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இறுதி வாக்களர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு

ஜோலார்பேட்டை : ஏப். 12-

திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.கே.சதீஷ்குமார் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, ஜோலார்பேட்டை கல்நார்சம்பட்டி, சந்திரபுரம், பணியாண்டபள்ளி, வெலகல்நத்தம் பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்து சிறப்பு உரையாற்றி வருகின்றனர். உடன் ஜோலார்பேட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர் சத்தியா சதீஷ்குமார், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு வாக்குகள் சேகரித்து வருகின்றனர்.

## தேனி மாவட்டம்தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு

### மாவட்ட ஆட்சித்தலைவர் . ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது

தேனி ஏப். 12-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், பழையபேருந்து நிலையம் அருகில் வாக்காளர்களிடையே

100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக பல்வேறு

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனித சங்கிலி, தெருநாடகம், கும்மிப்பாட்டு, விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.







அதனடிப்படையில் இன்றையதினம், தேனி பழைய பேருந்துநிலையம் அருகில், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ராட்சத பலூனை பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனைத்தொடர்ந்து. மயிலாட்டம், ஒயிலாட்டம், மாடாட்டம் போன்ற கண்கவர் கலை நிகழ்ச்சிகளும், மிக்கி மவுஸ், டாம் அண்ட் ஜெர்ரி, புலி, கரடி போன்ற வேடம் அணிந்தும், தேர்தல் விழிப்புணர்வு பாடல்கள் மூலமாகவும், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் கும்மி நடன நிகழ்வுகள் மூலமாகவும் விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலி (human chain) நடைபெற்றது. தொடர்ந்து, விழிப்புணர்வு பேரணியானது தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் தொடங்கி

பங்களாமேடு பகுதி வரை சென்று நிறைவுபெற்றது. இந்த மனித சங்கிலி பேரணியில் சுமார் 1000க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு அனைவரும் 100% வாக்களிக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பின்னர், வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கையெழுத்திட்டு தொடங்கி வைத்தும், வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை அரசு வாகனங்கள், ஆட்டோக்கள் மற்றும் பேருந்துகளில் ஒட்டி அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், திட்ட இயக்குநர்கள். தமிழரசி (ஊரக வளர்ச்சி), சந்திரா(மகளிர் திட்டம்), உதவி இயக்குநர்கள் உம்முல் ஜாமியா (ஊராட்சிகள்),. வெங்கடேஸ்வரன் (தணிக்கை). செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், வட்டாட்சியர் (தேனி).சதீஸ்குமார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் பூராடம் தின சிறப்பு வழிபாடு திரளான பக்தர்கள் பங்கேற்பு

மானாமதுரை ஏப்.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில், மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் முதல் ஜீவ ஒடுக்கம் கோவில் அமைந்துள்ளது.

இங்குள்ள தவச்சாலையில், மகா சித்தர் மாயாண்டி சுவாமியின் அவதார நட்சத்திரமான பங்குனி பூராடம் நட்சத்திரத்தை முன்னிட்டு சிறப்பு பூஜை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன.

நடைபெற்ற நிகழ்வுகள்:

மூலிகை அபிஷேகம்: முன்னதாக சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிக்கு 16 வகையான மூலிகைகளால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

அன்னதானம்: விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த வழிபாட்டில் கட்டிக்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி வழிபாட்டு குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் கண்டுப்பட்டியில் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு

காளையார் கோவில் ஏப்12-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு ஒன்றியப்பகுதியில் ஒன்றிய செயலாளர் ஆர்.எம். கென்னடி தலைமையில் உதய சூரியன் சின்னத்தில் நிற்கும் வேட்பாளர் கருணாஸ் தனது சூறாவளி பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார்...



வடக்கு ஒன்றியப் பகுதியான பாகை வாள் கோட்டை நாடுபாகனேரி . கீழக்கோட்டை. துருவம்பட்டி. சொக்கநாதபுரம் . காடனேரி. நகரம் பட்டி . மாங்காட்டுப்பட்டி . இலந்தமங்கலம் .ஆலவிளாம்பட்டி .ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் வேட்பாளர் கருணாஸ்.தனது உணவு இடைவேளையை முடித்துக் கொண்டு.பிறகு மாலை 5 மணியளவில் கண்டுப்பட்டி சேகரம் கண்டுப்பட்டி கிராமத்தில் தனது பிரச்சாரத்தை மேற்கொளளும் வேளையில் காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளர் என்.சக்திதாசன் மற்றும் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்

எம்.ஆர்.எஸ்.போஸ் ஆகியோரது ஏற்பாட்டில் வேட்பாளர் கருணாஸ்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் ஆரத்தி எடுத்தும். பட்டாசு வெடித்தும் . கைத்தறியாடை மற்றும் மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தப்பட்டது...

இந்த நிகழ்ச்சியின் போது திமுக நிர்வாகிகளான ஜீவா .பாஸ்கர் . பில்லப்பன் . அந்தோணிஜீவா. பார்த்தீபன் ,சரவணன் . சின்னையா உள்ளிட்ட

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும்

கண்டிப்பட்டி சேகரம் செங்குளிப்பட்டி, சிறுசெங்குளிப்பட்டி, துவரிப்பட்டி என சுற்றுவட்டாரப் பொதுமக்கள் வெகுவாக திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர் ..



# உதகையில் சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு வாக்காளர்களிடையே விழிப்புணர்வு

நீலகிரி, ஏப்.12-

உதகையில் சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மிதிவண்டி பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, வாக்களிப்பதின் அவசியம் குறித்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மிதிவண்டி பேரணியை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு வாக்காளர்கள், இளம் வாக்காளர்கள், பழங்குடியினர்கள் உள்ளிட்ட அனைவரும் எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் தேதி அன்று வாக்களிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியும், நேர்மையாக வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தொடர்ந்து விளையாட்டு போட்டிகள், ரங்கோலி கோலப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், உறுதிமொழி ஏற்றுக்கொள்ளுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மிதிவண்டி பேரணி நடத்தப்பட்டது. இப்பேரணியானது எச்ஏடிபி மைதானத்தில் தொடங்கி, சேரிங்கிராஸ், மணிகூண்டு, மத்திய பேருந்து நிலையம் வழியாக உதகை படகு இல்லம் சென்றடைந்தது. இப்பேரணியில் சுமார் 75க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு, வாக்களிப்பதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இப்பேரணியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் , ஆவின் பொது மேலாளர் ராஜேஷ் குமார், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் இந்திரா, தேசிய மிதிவண்டி போட்டி பதக்க வெற்றியாளர் ஸ்ரீநாத் லட்சுமிகாந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி குப்பை மேடு: சுகாதாரச் சீர்கேட்டால் மக்கள் அவதி தீர்வு காண நாம் தமிழர் கட்சி உறுதி

பரமக்குடி ஏப்.12-

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட அந்தக்குடி ஊராட்சியில் உள்ள ராம் நகர் பகுதியில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளால் அப்பகுதி மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இது குறித்து நாம் தமிழர் கட்சியின் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் எழில் இளவரசி அப்பகுதி மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.குப்பை மேட்டால் எழும் சிக்கல்கள்

கடந்த பல ஆண்டுகளாக இப்பகுதியில் குப்பைகள் முறையாக அப்புறப்படுத்தப்படாமல் குவிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பின்வரும் பாதிப்புகள் ஏற்படுவதாக மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்:



மழைக்கால பாதிப்பு:மழை நேரங்களில் குப்பைகள் அழுகி, அப்பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசுகிறது. சுகாதாரச் சீர்கேடு: கொசுத் தொல்லை அதிகரிப்பதோடு, பல்வேறு தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுவட்டாரப் பாதிப்பு: ராம் நகர் மட்டுமின்றி, இதனைச் சுற்றியுள்ள சுமார் 15 கிராமங்களும், நகரின் ஒரு பகுதியும் இந்தச் சுகாதாரச் சீர்கேட்டால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தீர்வு குறித்த வாக்குறுதி இதுகுறித்து கருத்து தெரிவித்த நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்டாக்டர் எழில் இளவரசி , "மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளைத் தனித்தனியாகப் பிரித்து, மக்கும் குப்பைகளை உரமாகவும், மக்காத குப்பைகளை மறுசுழற்சி முறையிலும் கையாண்டால் இத்தகைய நிலையைத் தவிர்க்கலாம். பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையான இந்தக் குப்பை மேட்டை முழுமையாக அகற்றி, இப்பகுதியில் சுகாதாரத்தை மீட்டெடுக்க நாம் தமிழர் கட்சி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்" எனத் தெரிவித்தார்.இப்பிரச்சினை குறித்து அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இதுவரை போதிய கவனம் செலுத்தவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.





# சின்னமனூர் ஒன்றிய பகுதிகளில் ஓ.பி.எஸ் தீவிர வாக்கு சேகரிப்பு

தேனி ஏப்.12-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னமனூர் ஒன்றிய பகுதிகளான திம்மிநாயக்கன்பட்டி, கந்தசாமிபுரம்,குப்பணசாரிபட்டி, சின்ன பொட்டிபுரம் ,சங்கராபுரம் ஜி. புதுக்கோட்டை எர்ணம்பட்டி, முத்தையன் செட்டிபட்டி, பங்காருசாமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.இந்த பிரச்சாரத்தின் போது ஆங்காங்கே திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மாலை மரியாதை செலுத்தி வரவேற்றனர்.தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் வாக்கு சேகரித்து பொதுமக்கள் மத்தியில் பேசும்போது"தமிழ்நாட்டுக்கு கிடைத்த ஒரு மகத்தான முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆவார். அவர் மீண்டும் இரண்டாம் நாள் முறையாக ஆட்சி கட்டிலில் அமர்ந்து தமிழ்நாட்டு மக்களை வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்வார். மு.க. ஸ்டாலினால் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது .குறிப்பாக பெண்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கி பல நல்ல திட்டங்களை உருவாக்கியுள்ளார்.எனவே மீண்டும் திமுக ஆட்சி தொடர போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் என்னை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்து தொகுதி மக்களுக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைப்பதோடு போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியை வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்வேன் என்று உறுதி அளிக்கிறேன்" என்று பேசினார்.இந்த பிரச்சாரத்தின் போது முன்னாள் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத் குமார்,சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன்,திமுக பிரமுகர் விமலேஸ்வரன் உள்பட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# 40 ஆண்டுகளாக சாலை வசதி இல்லை தேர்தலில் தீர்வு கிடைக்குமா?

மானாமதுரை ஏப்.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பழைய பேருந்து நிலையம் பகுதியில் உள்ள ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி அருகேயுள்ள பாதை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மண் சாலையாகவே உள்ளது. பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டாலும், இப்பகுதியில் தார் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.



இதனால் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தினமும் தூசி, குப்பை நிறைந்த பாதையில் சிரமத்துடன் பயணம் செய்கின்றனர். மழைக்காலங்களில் சாலை சேறும் களிமண்ணுமாக மாறி பெரும் அவதியை ஏற்படுத்துகிறது.

பலமுறை புகார் அளித்தும் தீர்வு கிடைக்காத நிலையில், தற்போது நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மக்கள் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்த முறை வெற்றி பெறும் வேட்பாளர் இந்த நீண்டகால பிரச்சினைக்கு முடிவு கொண்டு வந்து சாலை அமைப்பார்களா என்ற கேள்வி பொதுமக்களிடையே எழுந்துள்ளது.



# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு இரண்டாம் கட்ட சீரற்றமயமாக்கல் பணி

உதகை ஏப். 12-

2026 முன்னிட்டு, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட சீரற்றமயமாக்கல் பணியினை (Randomization) பொது பார்வையாளர்கள், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி தான்வி சுந்த்ரியல், , 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி எஸ். ஹரீஷ், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி சுஹாஸ் , காவல் பார்வையாளர் லதா மனோஜ் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் பவ்யா தண்ணீரு முன்னிலையிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட சீரற்றமயமாக்கல் பணியானது (Randomization) இன்று நடைபெற்றது. இதில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்கு தலா 305 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள், நிலை 1, நிலை 2 மற்றும் நிலை 3 என மொத்தம் 1,220 வாக்குச்சாவடி அலுவலர்களும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு தலா 286 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள்,

நிலை 1, நிலை 2 மற்றும் நிலை 3 என மொத்தம் 1,144 வாக்குச்சாவடி அலுவலர்களும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு தலா 292 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள், நிலை 1, நிலை 2 மற்றும் நிலை 3 என மொத்தம் 1,168 வாக்குச்சாவடி அலுவலர்களும் என மொத்தம் மூன்று தொகுதிகளில் உள்ள 736 வாக்குச்சாவடிகளுக்கு 3,532 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான (120%) இரண்டாம் கட்ட சீரற்றமயமாக்கல் பணியானது நடைபெற்றது.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் மாவட்ட ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி உட்பட பலர் உள்ளனர்.

# சிவகங்கை தெற்கு ஒன்றியம் அரசனி முத்துப்பட்டியில் சேது.கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு

சிவகங்கை ஏப். 12-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரும் முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவருமான. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சேது . கருணாஸ் சிவகங்கை நகரப் பகுதிகளில் முதல்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை முடித்து விட்டு சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் ஜெயராமன் தலைமையில் குறிப்பாக தெற்கு ஒன்றியப் பகுதிகளில் தனது சூறாவளி பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார்..



இதனிடையே நேற்றைய தினம் காலையில் பிரச்சாரத்தை சிவகங்கை அருகேயுள்ள அரசனி முத்துப்பட்டி கிராமத்திலிருந்து தொடங்கினார் ....

இந்நிலையில் சிவகங்கை திமுக மகளிரணி மாவட்டத் துணைத் தலைவரும். மொழிப் போர் தியாகி பத்தினாதனின் மனைவியுமான மார்கரேட் கமலா பத்தினாதன் ஏற்பாட்டில் அரசனி முத்துப்பட்டி கிராமத்தில் வேட்பாளர் கருணாஸ்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

இதனிடையே வேட்பாளருக்கு பட்டாசு வெடித்தும். ஆரத்தி எடுத்தும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது...

அப்போது அருகே இருந்த லூர்து அன்னை ஆலயத்தில் வேட்பாளர் கருணாஸ் வேண்டுதல் மேற்கொண்டார்...

இந்த நிகழ்ச்சியின் போது மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் . ஒன்றிய அவைத் தலைவர் கா.காளிதாஸ் . காங்கிரஸ் வட்டார தலைவர் கரும்பாவூர் உடையார்

ஹரிபாலா பாலச்சந்தர். சிங்கமுத்து . இராஜேஸ்வரி அண்ணாதுரை. கழக மூத்த முன்னோடி ரைஸ் மில் நாகராஜன் . காங்கிரஸ் கீழக்குளம் ரவிச்சந்திரன். காங்கிரஸ் பெரியசாமி. மதிமுக ஜெகதீசன் . பாக முகவர் கருப்பையா . பிடிஏ காயத்ரி பாலசுப்ரமணியன் . அகஸ்டின். செல்வக்குமார் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் மற்றும்

சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161